சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>பு.சா.1 பிருத்திவிராஜன் த/பெ ராஜா , வயது 42</u>

(<u>எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை)</u>

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக முதல் விசாரணை தெரிவித்துள்ளதற்கு ஆதாரமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. கடந்த 20.09.2022 அன்று எதிரிக்கு என் வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். சட்ட அறிவிப்பில் உள்ள விவரங்களை நான் தான் என் வழக்கறிஞருக்கு தெரிவித்தேன் என்றால் சரிதான். அந்த சட்ட அறிவிப்பானது தமிழ் மொழியில் இருந்தது. நான் கூறுவது தவறு என்றாலும் சட்ட அறிவிப்பானது ஆங்கில மொழியில் உள்ளது என்றாலும் சரிதான். எதிரி ஆசிரியராகவும் அலுவலகத்திலும் கணிணியில் பணியாற்றி வந்தார். எனக்கும் எதிரிக்கும் ஐந்து ஆண்டுகள் நட்பு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எது என் குடும்ப விபரங்கள் தெரியுமா என்றால் அவர் அவரது தாயாரையும் மனைவியும் தெரியும் மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. ஜோலார்பேட்டை சேர்ந்த காளி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. காளி என்பவருக்கு நான் உதவியாளராக இருக்கிறேன் என்றால் சரியல்ல. காளி என்பவர் நடத்தி வரும் பைனான்ஸ் நிறுவனம் எங்கு உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. காளி நடத்தி வரும் பைனான்ஸ் நிறுவனத்திற்கு நான் ஏஜெண்டாக வேலை செய்து கமிசன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ரூபாய் 5 லட்சம் பணமாக கொடுத்தேன். ரூபாய் 5 லட்சத்தை நான் வங்கியில் இருந்து எடுத்ததற்கு ஆதாரமாக ஆவணங்கள் உள்ளதா என்றால் அந்த பணம் நான் சேமித்து வைத்த பணமாகும் வங்கியில் இருந்து எடுத்த பணம் அல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கு வருமான வரி செலுத்தி உள்ளேன் என்றால் இல்லை. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் நபர்களுடன் உடன் செல்வேன். எட்டு வருடங்களாக நான் சேமித்த பணம் ரூபாய் 5 லட்சத்தை எதிரிக்கு

கடனாக கொடுத்தேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. நானும் காளி என்பவரும் சேர்ந்துதான் ரூபாய் மூன்று லட்சம் எதிரிக்கு கடனாக கொடுத்தோம் என்றால் சரியல்ல. அதே சமயத்தில் காளி என்ற நபர் பிரபாகரன் என்ற ஆசிரியருக்கும் ரூபாய் 3 லட்சம் கடனாக வழங்கினார் என்றால் காளி என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. ரூபாய் மூன்று லட்சம் கடனாக கொடுத்த போது காளி என்பவரும் நானும் சேர்ந்து ரூபாய் 30,000 பிடித்துக் கொண்டு மீதம் ரூபாய் 2 லட்சத்து 70 ஆயிரம் மட்டுமே எதிரிக்கு கடனாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பணத்தை 06.05.2020 அன்று எதிரிக்கு வழங்கப்பட்டது என்றாலும் அப்போது நான் உடன் இருந்தேன் என்றாலும் அதற்கு நான் கமிஷன் பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் சக ஆசிரியரான திரு. பிரபாகரன் என்பவரிடம் இருந்து எச்.டி.எப்.சி வங்கி காசோலை நாங்கள் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. மேலும் எதிரியின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலைகள் எண்ணிக்கை 05 நாங்கள் அவரிடம் இருந்து பெற்றோம் என்றால் சரியல்ல. அதே தேதியில் எதிரியின் மனைவியான பிரேமலதா என்பவரிடமிருந்து பாண்டும் கடன் உறுதி சீட்டும் நூறு ரூபாய் தாளில் கையொப்பம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியும் எதிரியின் மனைவி பிரேமலதா என்பவரும் 100 ரூபாய் தாளில் கூட்டாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் சாட்சியாக ஆசிரியர் பிரபாகரன் என்பவர் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரியல்ல. மேலும் எதிரி பெற்ற கடன் முழுவதையும் எனது நண்பரான காளி என்பவரின் மனைவி அல்லது சினேகிதி மதுமிதா என்பவரின் வங்கி கணக்கிற்கு இணையதள வழியாக செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலையை எண். 663181 ஆகும். இவ்வழக்கு காசோலை தவிர மற்ற காசோலைகள் அனைத்தும் காளி என்பவர் வசம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. காசோலை எண்கள் 663182 முதல் காசோலை 663185 நான்கு காசோலைகள் எதிரியால் வங்கியில் ஸ்டாப் பேமென்ட் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எதிரி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பின் விவரங்கள் எனக்கு தெரியும். கூட்டு செய்து காளி என்பவருக்கு வழங்கப்பட்ட காசோலையை நான் பூர்த்தி செய்து மோசடியாக இவ்வாறு கொடுத்துள்ளேன் என்றாலும் காளி என்பவருக்கு ஏற்கனவே பணத்தை முழுவதும் திரும்ப செலுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் காளி மற்றும் மதுமிதா ஆகியோருக்கு மட்டுமே இவ்வழக்கு

விவரங்கள் தெரியும் என்றாலும் சரியல்ல. எதிரி வாங்கிய கடனை முழுவதும் செலுத்தி விட்டதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எதிர் என்னிடம் ஐந்து லட்சம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் எதற்கு ஐந்து லட்சம் கொடுப்பதற்கு எனக்கு முகாந்திரம் இல்லை என்றாலும் சரியல்ல. இது மோசடியான பொய் வழக்கு என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.